[2006 டிசம்பர் 7

3. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடத்திய முதலமைச்சருக்குப் பாராட்டுத் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.*

திரு. கு. செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளாக, தேர்தல் நடத்தி முறையாக நிர்வாகம் செய்ய முடியாமல் இருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய 4 ஊராட்சிகளையும் தொடர்ந்து தனித் தொகுதிகளாக நீட்டித்து உத்தரவிட்டு, அங்கு வெற்றிகரமாகத் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை மீட்டெடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை நெஞ்சார, மனமார, ஒருமனதாகப் பாராட்டுகிறோம்.*

இந்த மாமன்றத்திலே அறிவித்தபடி, ஊராட்சித் தலைவர்களையும், துணைத் தலைவர்களையும், அந்த ஊராட்சிகளைச் சேர்ந்த தமிழ் மக்களையும் அழைத்து, சென்னையிலே சமத்துவப் பெருவிழா நடத்திய மாண்புமிகு முதல்வரின் சாதனையை, நின்று நிலைத்திருக்கும் நம்முடைய தமிழக மக்களெல்லாம் வரவேற்றிருக்கின்ற இப்படிப்பட்ட நிகழ்வைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். சாதியை ஒழித்து, சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் முனைப்பை நெஞ்சாரப் பாராட்டுவதோடு, சாதியை ஒழிப்பது என்பது ஒரு சாதாரணக் காரியமல்ல; செங்குத்தான பாறை ஒன்றில் தலைகீழாக ஏறுவதைப்போல் கடினமானது என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த மலையைக் கண்டு மலைத்துவிடாமல் நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள், துணிந்து ஏறி அந்த உச்சியிலே சமத்துவக் கொடியை ஏற்றியிருக்கிறார்கள். மன்னர்களுக்கெல்லாம் மன்னராக இருந்த கரிகால் பெருவளத்தான்போல், தலைவர்களுக்கெல்லாம் பெருந்தலைவராக இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சமூக நீதியைப் பாதுகாத்திருக்கிறார்கள். நாங்கள் இதை எப்படிப் பார்க்கிறோம் என்றால், புரட்சியாளர் அம்பேத்கர் எப்படி கௌதம புத்தரின் வழித்தோன்றலாகத் தொடர்ச்சியாக இருக்கிறாரோ, அப்படி பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் தொடர்ச்சியாக நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி சரித்திரச் சாதனை செய்த பெரியாரைப் போற்றித்தான், தந்தை பெரியார் அவர்களுக்கு, அன்னை மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் பெரியார் என்ற பட்டத்தை வழங்கிய வரலாற்றுச் சிறப்பு மிக்க அதே

நாளில், விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக எங்கள் இயக்கப் பொதுச் செயலாளர், என் அருமை அண்ணன் தொல். திருமாவளவன் அவர்கள், சமத்துவப் பெரியார் என்று பட்டம் வழங்கினார்கள். காஷ்மீரிலே தேர்தல் நடக்கிறது. எங்கெங்கெல்லாம் தீவிரவாதம் தலைவிரித்தாடுகிறதோ, அங்கெல்லாம் தேர்தல்களைக் கடந்த 10 ஆண்டுகளாக நம்முடைய அரசுகள் நடத்தின. ஆனால், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம் ஆகிய இடங்களில், அந்தத் தேர்தல் ஏன் நடைபெறவில்லை, எதற்காக நடத்தவில்லை என்று தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

நண்பகல் 12–00

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இட்ட ஆணையை ஏற்று இன்று நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இளைய கலைஞர், சமத்துவ நாயகர் அண்ணன் தளபதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அந்த மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து அங்கு என்னதான் பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது, எதற்காகத் தேர்தல் நடத்த முடியவில்லை என்று, அவர் மருத்துவராக அங்கே கண்டுபிடித்து, தேர்தலை வெற்றிகரமாக நடத்திக் காட்டி இருக்கிறார்கள்.

நேற்றையதினம்கூட சமூக நீதி எழுச்சி மாநாடு நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிற்கு யாரை அழைப்பது என்று எங்கள் மையக் குழுவிலே நாங்கள் முடிவு செய்யும்போது, சமூக நீதிக்குப் பாதுகாவலராக இருக்கிற, சமூக நீதியை நிலைநாட்டிய நம்முடைய இளைய கலைஞர் தளபதி அவர்களை அழைக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே நேற்று அவருக்கு சமத்துவ நாயகர் என்ற பட்டத்தை நாங்கள் அளித்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பாசறையில் உருவாகி வந்த பெரியாரின் தொடர்ச்சி நம்முடைய முதல்வர் அவர்கள், அதே உணர்வோடு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆலய அறங்காவலர்களாகப் பெண்களை நியமிக்க ஆணையிட்டுப் பெருமை சேர்த்தவர். அவரது சாதனை சரித்திர மைல் கல்லாக இப்பொழுது சமத்துவப் பெருவிழா கண்டிருக்கிறது.

சமத்துவபுரம் படைத்தும், சமத்துவப் பெருவிழா நடத்தியும் தமிழகத்தில் சமத்துவ உணர்வு தழைக்கப் பாடுபடும் நம்முடைய முதல்வர் நெஞ்சில் நிறைந்துள்ள சமத்துவ ஜனநாயக உணர்வைப் பாராட்டி, இங்கே

இந்தப் பேரவை உறுப்பினரான நான் மனதார சமத்துவப் பெரியார் அவர்களைப் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நம்முடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய அண்ணன் கண்ணப்பன் உட்பட அனைவரும் சமூக நீதிமேல் பற்று உள்ளவர்கள், சமூக நீதிமேல் நம்பிக்கை உள்ளவர்கள். இந்தியாவிலே எங்கு சமூக நீதிக்குப் பங்கம் ஏற்பட்டாலும், ஜனநாயகக் குரல்வளை நெரிக்கப்பட்டாலும் குரல் கொடுக்கின்ற ஒரே தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். தமிழகத்தைச் சார்ந்த சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டுவார்கள் என்று நம்பி அமருகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) அந்த சப்ஜெக்ட் முடிந்துவிட்டது. நீங்கள் வேறு சப்ஜெக்டில் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) சரி, சரி. கொஞ்சம் உட்காருங்கள்.

"கடந்த 10 ஆண்டுகளாக ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இயலாதிருந்த பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய பஞ்சாயத்துகளுக்கு சமத்துவப் பெரியார், முத்தமிழறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமது சாதுர்யத்தால் அனைத்துத் தரப்பு மக்களின் ஒத்துழைப்போடு தேர்தலை நடத்தி, தலைவர்களையும் தேர்வு செய்து, தாழ்த்தப்பட்டோர் உரிமைகளை நிலைநாட்டி, ஜனநாயகம் தழைத்தோங்கச் செய்தார்கள். இவை பொன் எழுத்துக்களால் சட்டப் பேரவை வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டும்" (மேசையைத் தட்டும் ஒலி)

என்னும் மாண்புமிகு திரு. கு. செல்வம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)